2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. மீ.அ. வைதியலிங்கம்: நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என் ஆய்வில் இருக்கிறது. நாளைக்கு ஒருவேளை வந்தால் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Revenue Stamp கிடைக்கவில்லை என்பது பற்றி....

1. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) திருச்சி – சிதம்பரம் சாலை, தரமானதாக மாற்றியமைத்தல்—தொடர்ச்சி

***திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “லால்குடி தொகுதிக்குட்பட்ட பழுதடைந்துள்ள திருச்சிராப்பள்ளி–சிதம்பரம் சாலையைத் தரமான சாலையாக மாற்றியமைக்க வேண்டியது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் (குறுக்கீடு).

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) சரி, நீங்கள் சொல்லிவிடுங்கள். நீங்கள் கேளுங்கள். புகழேந்தி, கேளுங்கள்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்களும், நானும், பரிதி இளம்வழுதியும் ** ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்தோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2005 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பெயர் எல்லாம் சொல்லக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினை பற்றி அறிவிப்புக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமே என் ஆய்வில் இருக்கிறது.

திரு. சி. ஞானசேகரன்: சபை முடிந்த பிறகு ஆய்வு செய்து என்ன பிரயோஜனம்?

1. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

(அ) திருச்சி – சிதம்பரம் சாலை, தரமானதாக மாற்றியமைத்தல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்:

அறிக்கை

திருச்சி–சிதம்பரம் சாலை கடந்த 2004 நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்த பெருமழையின் காரணமாக மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. இச்சாலை டோல்கேட்டிலிருந்து லால்குடி பூவாளூர், புள்ளம்பாடி, டால்மியாபுரம், அரியலூர், ஜெயங்கொண்டம் வழியாக சிதம்பரம் செல்கிறது. சர்க்கரை ஆலைக்குக் கரும்பும், சிமெண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருளான சுண்ணாம்பும் மிகுந்த அளவில் டிராக்டர் டிரெயிலர் மற்றும் லாரிகள்மூலம் இச்சாலையின் வழியே எடுத்துச் செல்லப்படுவதாலும், அதிகப் பேருந்துப் போக்குவரத்தினாலும் இச்சாலை மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறது. இச்சாலையின் அடிப்பகுதி களிமண் கொண்டதாக உள்ளதால், இச்சாலை அடிக்கடி பழுதடைந்து வருகிறது.